DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No.73/2022

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.தீபாராணி | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | முருகேசன் | தொழில் | : | தையல் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்). சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**3 வது எ.ம.த.கு.வி**

கேள்வி : விபத்து சொல்லப்பட்ட லாரிக்கு அந்த சாலையில் இயக்க அனுமதி இல்லை என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : அப்படி வாகனத்தை இயக்க அனுமதி சீட்டு இல்லை என தெரிந்து 2–வது எதிர்மனுதாரர் லாரியை இயக்க அனுமதித்தது 2–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் பாலிசி விதிமுறை மீறல் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : ம.த.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் லாரிக்கு எந்தவித சேதாரமும் இல்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : மனுவில் சொல்லப்பட்ட ஆட்டோவில் ஓட்டுநர் உட்பட மொத்தம் நான்கு நபர்கள் மட்டுமே பயணிக்க அனுமதி இருந்தது என்றும், அதை மீறி 5 நபர்கள் பயணித்தது மோட்டார் வாகன சட்ட மீறல் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கணவர் ஆட்டோ இயக்கி வருவாய் பெற்றார் என்றும் ஆட்டோ ஓட்டுநர் உரிமம் மற்றும் அடையாள அட்டை

என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்

பதில் : சரிதான். ஆனால் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேன்.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கணவர் மாதம் ரூ.40,000/- வீதம் சம்பளம் பெற்றதற்கு உங்கள் மூலம் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் உங்கள் கணவருக்கான ஆட்டோ ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்தில் சொல்லப்பட்ட ஆட்டோ ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை, எந்த காப்பீடு நிறுவனத்திலும் பாலிசி எடுக்கவில்லை, ஆட்டோவிற்கு தகுதி சான்று, அனுமதி சீட்டு, பதிவு சான்று ஆகியவை இல்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : ம.த.சா.ஆ.1, 7 விபத்து சம்பந்தமான குற்ற இறுதி அறிக்கையில் ஆட்டோ ஓட்டுநரும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால்?

பதில் : சரிதான். லாரி ஓட்டுநரும் குற்றவாளியாக உள்ளார்.

கேள்வி : விபத்து சமயத்தில் ஆட்டோ ஓட்டுநர் மீது மது அருந்தி இருந்ததாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : ஆட்டோ கவிழ்ந்து போகாமல் இருந்து இருந்தால் விபத்து நடக்க வாய்ப்பு இல்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து லாரி ஓட்டுநரின் கவனக் குறைவால் நடைபெறவில்லை என்றால்?

பதில் : தவறு.

கேள்வி : லாரி ஓட்டுநர் விபத்து சமயத்தில் கவனமாகவும், ஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை கடை பிடித்து சென்றார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : ஆட்டோ ஓட்டுநர் விபத்து சமயத்தில் கவனம் இன்றியும், அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை கடை பிடிக்காமல் சென்றார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : ஆட்டோவின் உரிமையாளர் இந்த மனுவிற்கு உரிய தரப்பினர் என்பதால் அவரை கட்சிக்காரராக சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரி இருக்கும் தொகைகள் மிக அதிகப்படியானது என்றால்?

பதில் : தவறு.

கேள்வி : லாரி ஓட்டுநர் அனுமதி சீட்டு இல்லாமல் லாரியை இயக்கியதால் இந்த 3–வது எதிர் மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்?

பதில் : சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 01.04.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.04.01 19:28:55 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
01.04.2025